# செயலாற்றுகை அறிக்கை
# 2025

## கொம்ப்றோலர் நாயகம் திணைக்களம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## உள்ளடக்கம்


| அத்தியாயங்கள் | | பக்க இல. |
|---|---|---|
| **01:** | **நிறுவன விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு** | |
| 1.1 | அறிமுகம் | 1 - 1 |
| 1.2 | தூர நோக்கு மற்றும் பணிக்கூற்று | 2 - 2 |
| 1.3 | குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் முக்கிய செயற்பாடுகள் | 2 - 3 |
| 1.4 | நிறுவனக் கட்டமைப்பு | 4 - 4 |
| **02:** | **முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்** | |
| 2.1 | அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களுக்கான இற்றைப்படுத்திய விரிவான மத்திய தரவுத்தளமொன்றினைப் பேணுதல் | 5 - 9 |
| 2.2 | அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துகள் முகாமைத்துவம் குறித்த கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் | 9 - 10 |
| 2.3 | நிதியல்லா சொத்துக்களின் விற்பனையிலிருந்து வருமானம் | 10 -11 |
| 2.4 | சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் | 12 -12 |
| **03:** | **2025 டிசம்பர் 31 முடிடைந்த வருடத்திற்கான முழுமொத்த நிதிச் செயலாற்றுகை** | |
| 3.1 | நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று | 13 - 13 |
| 3.2 | நிதி நிலைமை பற்றிய கூற்று | 14 - 14 |
| 3.3 | காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று | 15 - 15 |
| 3.4 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 16 - 16 |
| 3.5 | வருமான சேகரிப்பு செயலாற்றுகை | 16 - 16 |
| 3.6 | ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 16 - 16 |
| 3.7 | நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு | 16 - 16 |
| 3.8 | நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை | 17 - 17 |
| 3.9 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 17 - 17 |

| அத்தியாயம் | | Page No. |
|---|---|---|
| **04:** | **செயலாற்றுகைச் சுட்டிகள்** | |
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் | 18 -18 |
| **05:** | **பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை** | |
| 5.1 | அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் | 19 -21 |
| 5.2 | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக | 21 -21 |
| **06:** | **மனிதவள விபரம்** | |
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | 22 -22 |
| 6.2 | பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக | 22 -22 |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | 22 -25 |
| **07:** | **இணக்கப்பாட்டு அறிக்கை** | 26 -31 |
| **அட்டவணைகள்** | | |
| 2.1 | அரசாங்கத்தின் மோட்டார் வாகனத் தொகுதியின் வயதுப் பகுப்பாய்வு | 6 - 6 |
| 2.2 | வாடகைக்கு விடப்பட்ட இடங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் வாடகைக்கு / குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடங்கள் உட்பட சொந்தமான கட்டிடங்களின் தகவல்களின் சுருக்கம். | 8 - 8 |
| 2.3 | பொதுத்துறை நிறுவனங்களால் சொந்தமான அல்லது வாடகைக்கு / குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் தகவல்களின் சுருக்கம் | 8 - 8 |
| 2.4 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை வருமானம் | 11- 11 |

# கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2025

## செலவினத் தலைப்பு இல. 333

## அத்தியாயம் 01 – நிறுவன விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்:

கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகம் அரசாங்கத்தின் ஆதனங்கள், பொருட்கள் மற்றும் செலவு முகாமைத்துவம் என்பவற்றை கண்காணிப்பதனை பிரதான பொறுப்பாகக் கொண்டுள்ளது. அந்தவகையில், அரசாங்க நிறுவனங்களின் (அரசாங்க நிறுவனங்கள், அரசாங்க தொழில் முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்) நிதி அல்லாத ஆதனங்களுக்கான மத்திய தரவு அமைப்பு ஒன்றினைப் பேண வேண்டியது அவசியமென்பதுடன், நிதி அல்லாத ஆதன முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்தும் அதேவேளை, பயன்பாடற்ற வளங்களை இனம்காண்பதுடன் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி வேலைச் சட்டகத்தினை வலுப்படுத்துவதற்கு குறித்த ஆதனங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும்.

அரசாங்கத்தின் நிதி சாராத சொத்துக்களின் முறையான முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்காக, பொது சொத்துக்கள் முகாமைத்துவச் சட்டத்தை இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 06/2023 இனை வெளியிட்டதன் மூலம் அரசின் நிதி அல்லாத சொத்துக்களின் சீரான செயற்பாட்டுக்கு வசதியளிக்கும் வகையில் இணைய வழியிலான நிதி அல்லாத ஆதன முகாமைத்துவ முறைமை (Non-Financial Assets Management System - NFAMS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. NFAMS இன் வடிவமைப்பு, மென்பொருள் உருவாக்கம், செயல்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவை அரசாங்கத்திற்கு எந்தவொரு கூடுதல் செலவையும் ஏற்படுத்தாமல் கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017 மற்றும் அதனைத் தொடர்ந்த சுற்றறிக்கைகளின் மூலம் செயல்படுத்தப்பட்ட விரிதாள் அடிப்படையிலான முறையிலிருந்து, இந்த நோக்கத்திற்கான தகவல்களைப் பதிவுசெய்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை வலை அடிப்படையிலான நிகழ்நேர தரவுப் பதிவுத் தளத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளன. NFAMS இன் முதல் தொகுதியான, வாகனங்கள் தொடர்பான தொகுதி, 2023 செப்டம்பர் 01 முதல் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கட்டிடங்கள் தொடர்பான தொகுதி, ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 03/2026 இனை வெளியிட்டதன் மூலம் 2026 ஜூன் 15 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கட்டமைப்பு தொடர்பான தொகுதி, நிலங்கள் தொடர்பான தொகுதி மற்றும் ஆலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தொடர்பான தொகுதி ஆகியவை படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

NFAMS இலுள்ள தகவல்களின் துல்லியத்தை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு நிறுவனத்தின் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளருக்கு கணக்காய்வு வசதி வழங்கப்பட்டுள்ளது. வாகனங்கள் தொடர்பான பிரிவில் கணக்காய்வு வசதியை வழங்குவதற்காக, ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2026 வெளியிடப்பட்டுள்ளது.

## 1.2 தூர நோக்கு மற்றும் செயற்பணி

**(அ) தூர நோக்கு:**

அரசாங்கத்துறை நிதி அல்லாத ஆதன முகாமைத்துவத்துக்கான உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் நிறுவனமாக திகழ்தல்.

**(ஆ) செயற்பணி:**

நம்பகரமான நிதி அல்லாத ஆதன முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி சட்டகத்தினை வலுப்படுத்துவதற்கு நிதி அல்லாத ஆதனங்களின் வினைத்திறனான பயன்பாட்டை உறுதிப்படுத்தும் அதேவேளை விரிவான மத்திய நிதி அல்லாத ஆதனப் பதிவொன்றினைப் பேணுதல்.

## 1.3 நோக்கங்கள், பிரதான பணிகள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

**(அ) நோக்கங்கள்:**

(i) அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை் முகாமை (அரசாங்க நிறுவனங்கள், அரசாங்க தொழிற் முயற்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்):

அ. அனைத்து நிதி அல்லாத சொத்துக்களையும் ஆதன முகாமைத்துவ அமைப்பையும் பதிவு செய்ய புதுப்பிக்கப்பட்ட விரிவான மைய தரவுத்தளத்தை (இணையவழி அமைப்புடன்) நிறுவுதல்.

ஆ. நிதியல்லாத சொத்துக்களை திறம்பட மற்றும் திறமையாக பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்திக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.

இ. நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்பை சரியாக அறிக்கையிடுவதை உறுதி செய்தல்.

ஈ. நிதி அல்லாத சொத்துக்களின் நிர்வாகத்தில் தலைமைத்துவம் மற்றும் பாதுகாவலர் பாத்திரத்தை வகித்தல்.

(ii) அரசாங்க நிறுவனங்களின் மூலதன சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை சேகரித்தல்.

**(ஆ) பிரதான பணிகள்ி:**

(i) அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை் முகாமைத்துவம்

அ. அனைத்து நிதியல்லாத சொத்துகள் தகவல்களையும் (தேசிய இருப்புநிலைக் குறிப்பில் மதிப்பீட்டுடன் சொத்துகளைப் பதிவுசெய்ய இயலும்) பதிவுசெய்து அறிக்கையிடுவதற்காக புதுப்பிக்கப்பட்ட விரிவான மையத் தரவுத் தளத்தை (ஆன்லைன் தரவுத்தளத்துடன்) பராமரித்தல் மற்றும் ஒரு சொத்து முகாமைத்துவ முறைமை.

ஆ. நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் செலவு முகாமைத்துவம் ஆகியவற்றின் உகந்த பயன்பாட்டிற்காக தவறான நிர்வாகம், பொது சொத்துக்களை வீணாக்குதல் மற்றும் பாழாக்குதலை தடுப்பாற்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.

(ii) அரசாங்க நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களை விற்பனை செய்வதற்கான வருமானக் கணக்கீட்டு அலுவலராக செயல்படுதல்.

**(இ) பிரதான செயற்பாடுகள்:**

அ. அரசாங்கத்தின் அனைத்து நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் சொத்து முகாமைத்துவ முறைமை ஆகியவற்றின் புதுப்பிக்கப்பட்ட விரிவான மைய தரவுத்தளத்தை (இணையவழி தரவுத்தளத்துடன்) உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்.

ஆ. கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.

இ. அரசாங்க சொத்துக்களைக் கொள்வனவுசெய்வதற்கு பரிந்துரைத்தல், பராமரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

ஈ. அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை நிர்வகிப்பதற்குத் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தல். அத்தோடு, இந்தச் சொத்துக்களின் உற்பத்தி பயன்பாட்டிற்கான சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்தல்.

உ. அரசாங்கத்தினால் முடிவுகளை எடுப்பதற்கான நிர்வாகத் தகவல்களை வழங்குதல்.

ஊ. அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் சட்டப்பூர்வ உரிமைச் சிக்கல்களைத் தீர்த்தல்.

எ. அரசாங்க நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நிதி அல்லாத சொத்துக்களை ஒதுக்குதல்.

ஏ. அரசாங்க தொழிற் முயற்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.

ஐ. முதலீடுகள் மற்றும் நிதி நிலுவைகளுக்கு உதவுதல், செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துகளை அடையாளம் காணுதல் மற்றும் தொடர்புடைய தகவல்களை வழங்குதல் மற்றும் ஒழுங்கு விதிகளை பிரப்பித்தல்.

ஒ. அரசாங்க நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கை செய்தல்.

### 1.4 நிறுவனக் கட்டமைப்பு




**அ.அ – அபிவிருத்தி அலுவலர்**
**முு.சே.அ. – முகாமைத்துவ சேவை அலுவலர்**
**அ.உ – அலுவலக உதவியாளர்**

## அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்திக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களின் முகாமையை உறுதி செய்வதற்காக, நிதி அல்லாத சொத்துக்களுக்கான ஒரு மத்திய பதிவேட்டைப் பராமரித்தல் மற்றும் பயனற்ற வளங்களை அடையாளம் காணும் அதேவேளையில் அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்தல் அவசியமாகும்.

### 2.1 அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களுக்கான இற்றைப்படுத்திய விரிவான மத்திய தரவுத்தளமொன்றினைப் பேணுதல்

முதற் கட்டமாக, சர்வதேச நாணய நிதியத்தின் அரசாங்க நிதி புள்ளிவிபரக் கையேடு - 2014 இணைப் பின்பற்றி சொத்து குறியீடுகளால் வகைப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் வாகனங்கள், கட்டிடங்கள், காணிகள், கட்டமைப்புகள், ஆலை மற்றும் இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற அனைத்து நிதி அல்லாத சொத்துக்களின் அடிப்படை தகவல்களை சேகரிப்பதற்கான வழிமுறைகளை வழங்குவதற்காக 01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை 2017 ஜூன் 28 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

#### (அ) விரிவான மத்திய இணைய அடிப்படை (web-based) தரவுத்தளத்தை நிறுவுதல் :

அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்து முகாமைக்கான விஸ்தீரண மத்திய (Online) தரவுத் தொழில்நுட்ப முறை மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப முறையை இணைந்த திறைசேரி தகவல் அமைப்புடன் (ITMIS) நிறுவுவதற்கு கடுமையான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. அதற்கமைய இணைய அடிப்படை நிதியல்லாத ஆதன முகாமைத்துவ முறைமை (NFAMS) ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை 06/2023 வெளியிடப்பட்டு 2023 செப்டம்பர் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. நிதி அல்லாத சொத்து முகாமைத்துவ முறையைப் பேணல் மற்றும் அறிக்கையிடல் பொறுப்புக்கூறலை விருத்திசெய்வதற்கு இந்த தகவல் முகாமைத்துவ அமைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அனைத்து அரசாங்க நிறுவனங்களும் அவர்களின் சொத்துக்கள் பதிவேட்டை வலை தள அமைப்பின் (web – based platform) மூலம் பேணிவருதல் மற்றும் அவர்களின் தேவைகள் மற்றும் ஆதன முகாமைத்துவ வசதிகளை வழங்குவதற்கு இந்த NFAMS அமைப்பு மூலம் வசதிகள் வழங்கப்படுகின்றன. NFAMS கணினியில் ஆரம்பமாக வாகனங்கள் 2023 செப்டம்பர் 01 முதல் பதியப்பட்டுள்ளன. NFAMS இன் இரண்டாவது தொகுதியாக, கட்டிடங்கள் குறித்த தொகுதி 2026 ஜூன் 15 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கட்டமைப்புத் தொகுதிக்கான மென்பொருள் உருவாக்கம் நடைபெற்று வருகிறது. மேலும், காணிகள் குறித்த NFAMS தொகுதி மற்றும் பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் குறித்த தொகுதிகள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

#### (ஆ) மத்திய தரவுத் தொகுதி – வாகனங்கள்

ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 06/2023 இனை வெளியிட்டதன் மூலம் 2023 செப்டம்பர் 01 முதல் அறிமுகம் செய்யப்பட்ட இணைய அடிப்படையிலான தரவுப் பதிவு நிதி அல்லாத சொத்து முகாமைத்துவ முறைமையின் (NFAMS) கீழ் 2026 ஜூன் 17 இல் பதிவுசெய்யப்பட்டது. அரசாங்க நிறுவனங்களுக்கு உரித்தான/ பயன்படுத்தப்பட்ட தொகை 96,168 (92,261 இயங்கும் நிலையில் மற்றும் 3,9507 இயங்கும் நிலையில் இல்லை). மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படாத கட்டுமானத் தொழிலில் பயன்படுத்தப்படும் வாகனங்கள், படகுகள், தரை வாகனங்கள் போன்ற

வாகனங்களும் இந்த வாகனக் குழுவில் அடங்கும். வாகனத்தின் வயது மற்றும் வகையின் அடிப்படையில் இந்த வாகனங்களின் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1 : 2026.06.17 அன்று NFAMS இல் பொது நிறுவனங்களால் பதிவு செய்யப்பட்டவாறு அரசாங்க வாகனத் தொகுதியின் வயதுப் பகுப்பாய்வு**

| வாகன வகை * | 1-5 வருடம் | 6-10 வருடம் | 11-15 வருடம் | 15 வருடத்திற்கு அதிகம் | தொத்தம் |
|---|---|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | 578 | 3,881 | 4,344 | 7,170 | 15,973 |
| கார் | 915 | 1,215 | 5,295 | 6,748 | 14,173 |
| இருநோக்கு வாகனம் | 34 | 1,075 | 3,299 | 6,140 | 10,548 |
| பேருந்து | 558 | 462 | 3,440 | 3,066 | 7,526 |
| மோட்டார் லொரி | 189 | 827 | 1,977 | 3,948 | 6,941 |
| நில வாகனம் | 149 | 854 | 1,404 | 3,652 | 6,059 |
| இரட்டை கெப் | 79 | 626 | 1,958 | 2,566 | 5,229 |
| டிரக்டர் ரெய்லர் அல்லது பவுசர் | 792 | 634 | 1,179 | 1,967 | 4,572 |
| முச்சக்கர வண்டி | 2,062 | 315 | 733 | 1,308 | 4,418 |
| டிரக்டர் | 282 | 462 | 751 | 2,436 | 3,931 |
| மோட்டார் கோச் | 47 | 214 | 878 | 1,385 | 2,524 |
| வேன் | 76 | 304 | 695 | 1,259 | 2,334 |
| அம்புலன்ஸ் | 148 | 653 | 424 | 953 | 2,178 |
| ஒற்றை கெப் | 60 | 415 | 506 | 572 | 1,553 |
| சிறப்பு நோக்க வாகனம் | 108 | 390 | 569 | 366 | 1,433 |
| டிரக் | 263 | 68 | 423 | 558 | 1,312 |
| ஏனைய | 561 | 953 | 1,259 | 2,691 | 5,464 |
| முழு மொத்ததம் | 6,901 | 13,348 | 29,134 | 46,785 | 96,168 |

* வாகனத்தின் வகை (ஏனையவை தவிர) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வாகனப் பதிவுச் சான்றிதழில் கொடுக்கப்பட்டுள்ள வகைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. மேலும், அதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2024 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொகுசு வகை வாகனங்கள், கார், இரட்டைப் பயன்பாடு மற்றும் பிற ஆகிய வகைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

*மூலம்: கொம்றோளர் நாயம் அலுவலகம்*






**வாகன தொகுதி கணக்காய்வு:**

ஒவ்வொரு பொது நிறுவனமும் NFAMS இல் வாகனப் பதிவையும் அதனுடன் தொடர்புடைய நிகழ்நேரத் தரவுப் பதிவையும் துல்லியமாகச் செய்வதை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு நிறுவனத்தின் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளருக்கான கணக்காய்வு வசதியும் இந்த முறைமையில் வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2026-ஐ வெளியிட்டுத் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

**(இ) மத்திய தரவுத்தளம் - கட்டிடங்கள்**

இணைய அடிப்படையிலான நிகழ்நேர தரவுப் பதிவு NFAMS இன் கீழ் ஒரு மையப்படுத்தப்பட்ட கட்டிடத் தரவுத்தளத்தை நிறுவும் பொருட்டு, NFAMS இன் இரண்டாவது தொகுதியாக, கட்டிடங்கள் தொடர்பான தொகுதி 2026 ஜூன் 15 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அதன்படி, அனைத்து பொது நிறுவனங்களின் தலைவர்களும், தங்கள் பொறுப்பில் உள்ள அனைத்து கட்டிடங்கள் / கட்டிட இடங்களையும் பதிவுசெய்து, அந்தந்த கட்டிடம் / கட்டிட இடத்தின் பயன்பாட்டையும், தேவைக்கேற்ப, 2026 செப்டம்பர் 30 இற்கு முன்னர் NFAMS இல் பதிவு செய்ய வேண்டும்.

2022 சனவரி 03 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2022 கட்டிடங்கள் தொடர்பான தரவுகளை பூர்த்தி செய்வதற்கான தகவல்களை சேகரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய, 2021 டிசம்பர் 31 ஆம் திகதி அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் வாடகைக்கு/ குத்தகைக்கு விடப்பட்ட அரசாங்க நிறுவனங்களால் வாடகைக்கு விடப்பட்ட இடங்கள் உள்ளிட்ட தகவல்களின் சுருக்கம் அட்டவணை 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2021 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் பயன்படுத்தப்படும் தளத்தின் அளவு 57.1 மில்லியன் சதுர மீட்டராகவும், வாடகை/வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களில் பயன்படுத்தப்படும் தரைப் பரப்பளவு 2.9 மில்லியன் சதுர மீட்டராகவும், அதற்கான ஆண்டுச் செலவு ரூபா 11.6 பில்லியனாகவும் காணப்பட்டது. இதற்கிடையில், பயன்படுத்தப்படாத நிலப்பரப்பு சுமார் 0.8 மில்லியன் சதுர மீட்டர் ஆகும். மேலும், அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் 1.7 மில்லியன் சதுர மீட்டர் தளம் வாடகைக்கு விடப்பட்டுள்ளதால், அரசாங்க நிறுவனங்களுக்கு ரூபா 6.2 பில்லியன் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூபா 3.1 பில்லியன் ஆண்டு வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2: அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் வாடகைக்கு வழங்கப்பட்ட வளாகங்கள் உட்பட அரசு நிறுவனங்களால் வாடகை/குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்கள் பற்றிய தகவல்களின் சுருக்கம் (2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு)**

| அரசாங்க நிறுவனங்கள் | பயன்படுத்தப்படும் நிலப் பரப்பு (சதுர மீட்டர்) | | | பயன்படுத்தப் படாத நிலப் பரப்பு (சதுர மீட்டர்) | வருடாந்த வாடகை / குத்தகை ரூ.மி. | வாடகைக்கு விடப்பட்ட நிலப்பரப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | தனியுடமை | வாடகை / குத்தகை | மொத்தம் | | | நிலப் பரப்பு (ச.மீ) | வருட வருமானம் (ரூ.மி.) |
| அரசு நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் | 46,041,744 | 2,680,256 | 48,722,000 | 596,855 | 11,439.6 | 970,225 | 8,564.2 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் | 11,137,528 | 200,502 | 11,338,030 | 188,345 | 148.4 | 721,656 | 749.6 |
| **மொத்தம்** | **57,179,272** | **2,880,758** | **60,060,030** | **785,200** | **11,588.0** | **1,691,881** | **9,313.8** |

குறிப்பு: இந்த தகவலில் கேரேஜ்கள், குடியிருப்புகள், சுற்றுளா பங்களாக்கள், ஓய்வு இல்லங்கள் மற்றும் பிற தகவல்கள் உள்ளடக்கப்பவில்லை அத்தகைய குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்.

### (ஈ) மத்திய தரவு அமைப்பு - காணிகள்

NFAMS அமைப்பின் கீழ் கட்டிட தொகுதி, காலப்போக்கில் செயல்படுத்தப்பட்டு, அதற்கேற்ப புதுப்பிக்கப்பட்ட கட்டிட தரவுத்தளம் உருவாக்கப்படும்.

அரசாங்க காணி தரவு முறைமையை உருவாக்குவதை நிறைவு செய்வதற்கான தகவல்களை சேகரிப்பதற்காக 2022 ஆம் ஆண்டு சனவரி 07 ஆம் ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 03/2022 வெளியிடப்பட்டது. அதற்கிணங்க சில அரசாங்க நிறுவனங்கள் தகவல்களைச் சமர்ப்பித்ததுடன், 740 அரசாங்க நிறுவனங்கள் தகவல்களைச் சரியாகச் சமர்ப்பிக்கவில்லை. மேலும், 395 அரசாங்க நிறுவனங்களினால் காணி தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

**அட்டவணை 2.3 அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வடகைக்கு / குத்தகைக்கு விடப்பட்ட காணிகளின் சாராம்சம் 2021.12.31 ஆம் திகதிக்கு**

| அரசாங்க நிறுவனம் / காணிப் பாவனை | | காணி அளவு (ஹெக்டயார்) |
|---|---|---|
| **மொத்தக் காணி பரப்பளவு** | | **1,490,950** |
| | *அவற்றில் காடுகள்* | *1,125,700* |
| **i** | **பயன்படுத்தப்படும்** | **1,474,711** |
| | அரசாங்க நிறுவனங்கள் | 1,404,656 |
| | அரச துறை நிறுவனங்கள் | 49,563 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் | 20,493 |
| **ii** | **பயன்படுத்தப்படாத** | **13,702** |
| | அரசாங்க நிறுவனங்கள் | 8,826 |
| | அரச துறை நிறுவனங்கள் | 4,468 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் | 407 |
| **iii** | **பயன்பாடு தொடர்பில் குறிப்பிடப்படாத** | **2,537** |
| | அரசாங்க நிறுவனங்கள் | 1,147 |
| | அரச துறை நிறுவனங்கள் | 1,097 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் | 294 |

2021 டிசம்பர் 31 ஆம் திகதி அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு விடப்பட்ட காணிகள் பற்றிய தகவல்கள் அட்டவணை 2.3 இல் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு / குத்தகைக்கு விடப்பட்ட மொத்தக் காணிகள் 1.49 மில்லியன் ஹெக்டயார்கள் ஆகும், இதில் 1.12 மில்லியன் ஹெக்டயார் காடுகளால் சூழப்பட்ட காணிகளாகும். அறிக்கையிடப்பட்ட நிலப்பரப்பில் 1.47 மில்லியன் ஹெக்டயார் பயன்படுத்தப்பட்ட காணியும் 13,702 ஹெக்டயார் பயன்படுத்தப்படாத காணியும் அடங்கும். 2,537 ஹெக்டயார் காணியின் பயன்பாடு அரசாங்க நிறுவனங்களால் தெரிவிக்கப்படவில்லை.

## 2.2 அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துகளின் முகாமைத்துவம் குறித்த கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்

### (அ) வாகனங்கள் கொள்வனவை நிர்வகித்தல்:

2019 நடுப்பகுதியில் இருந்து அரசாங்க நிறுவனங்களுக்கான பயன்பாட்டு வாகனங்கள் தவிர்ந்த மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதை தற்காலிகமாக இடைநிறுத்தி, 2019 செப்டம்பர் 24 ஆம் திகதி தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 05/2019 வெளியிடப்பட்டது. இவ்வாறு, அபிவிருத்திப் பணிகள் மற்றும் பிற அத்தியாவசிய நோக்கங்களுக்காகத் தேவைப்படும் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைத் தவிர, அரசாங்கத்தின் வாகனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அரசாங்கத்திற்கு மேலதிக செலவுகள் ஏதுமின்றி, ஏற்கனவே உள்ள மோட்டார் வாகனக் குழுமம் பயன்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் ஏற்கனவே உள்ள பயன்பாட்டு வாகனங்களின் தேவையையும் சிக்கனமான பயன்பாட்டையும் கண்டறிந்து, 2025 ஆம் ஆண்டில் பெறுகை செய்வதற்காகப் பெறப்பட்ட மொத்த 1372 பயன்பாட்டு வாகனங்களில் இருந்து, 1300 பயன்பாட்டு வாகனங்களைப் பெறுகை செய்வதற்கு அங்கீகரைம் வழங்குமாறு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.

### (ஆ) அரச வாகனங்களின் உரிமைச் சிக்கல்களைத் தீர்த்தல்:

சில அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் கணிசமான எண்ணிக்கையிலான வாகனங்கள் அந்த நிறுவனங்களுக்குச் சட்டப்பூர்வமாகச் சொந்தமானவை அல்ல என்பதுடன், அவற்றின் சட்ட ரீதியான உரிமம் வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு உரியது என்பதை கொம்ப்றோலர் நாயகம் அலுவலகம் அடையாளம் கண்டுள்ளது. எனவே, மோட்டார் வாகனங்களின் பதிவு உரிமைகளைத் தீர்ப்பது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கும் 02/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை 2017 டிசம்பர் 21 ஆம் திகதியும், 03/2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை 2018 அக்டோபர் 10 ஆம் திகதியும் வெளியிடப்பட்டது. 2025 வருடத்தின்போது, 39 வாகனங்களின் பதிவு உரிமைச் சிக்கல்களைத் கொம்ப்றோலர் நாயகம் அலுவலகம் தீர்த்துள்ளது. அதற்கமைய, அதன்படி, 2019 முதல் 2025 டிசம்பர் 31 வரை, கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகம் 1001 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமைச் சிக்கல்களைத் தீர்த்துள்ளது.

**(இ) அரசாங்க பெறுகை நடைமுறையின்படி பொது நிறுவனங்களுக்கு அதிக சுமையை ஏற்படுத்தும் சொகுசு வாகனங்களை அப்புறப்படுத்துதல்**

2024 டிசம்பர் 02 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அந்தந்த பொது நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு சிக்கனமாக இல்லாத / தேவையில்லாத சொகுசு வாகனங்களை அப்புறப்படுத்தும் வகையில், அனைத்து பொது நிறுவனங்களும் 1800 சீசீ எஞ்சின் திறன் கொண்ட பெற்றோல் வாகனங்களையும் / 2300 சீசீ எஞ்சின் திறன் கொண்ட டீசல் வாகனங்களையும் (டபுள் கப்ஸ், சிங்கிள் கப்ஸ், வேன்கள், பேருந்துகள், லொரிகள் மற்றும் டிரக்குகள் போன்ற வாகனங்கள் தவிர) அந்தந்த நிறுவனத்தின் வாகனத் தேவையை மதிப்பிட்ட பிறகு அப்புறப்படுத்த அறிவுறுத்தி 2024 டிசம்பர் 18 ஆந் திகதிய 05/2024 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

**(ஈ) இயங்கும் நிலையிலில்லாத வாகனங்களை அப்புறப்படுத்துதல் அல்லது பழுதுபார்த்தல் மற்றும் பயன்படுத்துதல்**

வாகனங்களை முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும், இந்த சொத்துக்கள் சேதமடைவதையும், அரசாங்கத்திற்கு வருமான இழப்பைத் தடுக்கத் தேவையான நேரத்தில் பழுதுபார்த்து பயன்படுத்துவதையோ அல்லது அப்புறப்படுத்துவதையோ உறுதி செய்வதற்கும், அனைத்து பொது நிறுவனங்களுக்கும் தேவையான வழிமுறைகளை வழங்கும் இல. 05/2020 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை 2020 அக்டோபர் 02 அன்று வெளியிடப்பட்டது. சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 04/2022 மற்றும் 05/2024 ஆகியவற்றாலும், தொடர்புடைய வழிமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தையும், உரிய பராமரிப்புடன் வாகனங்களை முறையாகப் பயன்படுத்துவதன் அவசியத்தையும், கவனக்குறைவான பயன்பாட்டைத் தடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

**(உ) நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதல்**

1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் நிதி விதிமுறைகள் அல்லது பொது திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், அரசாங்கத்தின் வாகனங்கள், கட்டிடங்கள், காணி, கட்டமைப்புகள், பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றின் மதிப்பீடு குறித்த வழிமுறைகளை வழங்கவில்லை. எனவே, இந்த சொத்துக்களுக்கான மதிப்பீட்டுக் கொள்கை 04/2018, 02/2019 மற்றும் 05/2021 ஆகிய இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் உருவாக்கப்பட்டது. 02/2024 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையானது முந்தைய சுற்றறிக்கைகளால் வழங்கப்பட்ட வாகனங்களின் மதிப்பீடு குறித்த விதிகளையும் உள்ளடக்கிய வாகனங்களின் மதிப்பீடு குறித்த வழிமுறைகளை வழங்குகிறது. அனைத்து நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்பீடும் NFAMS இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வருமானம்

2018 மார்ச் 22 ஆம் திகதிய அரசிறைக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2015(xii) இன் பிரகாரம், 2018 சனவரி 01 ஆம் திகதி முதல் மூலதன சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் கணக்குகளை பேணுவதற்கான கணக்கீட்டு அலுவலராக கொம்ப்றோலர் நாகம் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் பொருட்டு, 2026 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும், 2025 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளைப் பெறவும் அறிவுறுத்தி, ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2025, 2025 ஜூன் 06 அன்று வெளியிடப்பட்டது. மேலும், 2025 ஜூன் 30 அன்றுள்ளவாறு வருமான பகுதிகள், முதல் ஆறு மாதங்களில் வசூலிக்கப்பட்ட நிலுவைத் தொகைகள் மற்றும் தொடர்புடைய காலகட்டத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட வருமான குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக 2025 ஜூன்

11 அன்று ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 02/2025 வெளியிடப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட வருமான நிலுவைகள் மற்றும் தொடர்புடைய காலகட்டத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட வருமானம் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக 2025 டிசம்பர் 10 அன்று ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 03/2025 வெளியிடப்பட்டது.

**அட்டவணை 2.4: நிதி அல்லாத சொத்து விற்பனை வருமானம் (ரூ. மில்)**

| **விபரம்** | **2021** | **2022** | **2023** | **2024** | **2025** | **2026 (2026.04.30 அன்று உள்ளவாறு)** |
|---|---|---|---|---|---|---|
| மூலதன சொத்துக்கள் விற்பனை - வாகனங்கள் | 128.3 | 226.4 | 329.6 | 136.0 | 2954.5 | 358.2 |
| மூலதன சொத்துக்கள் விற்பனை - வேறு | 60.1 | 357.8 | 186.3 | 974.1 | 632.2 | 95.4 |
| **மொத்தம்** | **188.4** | **584.2** | **515.9** | **1110.1** | **3586.7** | **453.6** |

2024 ஆம் ஆண்டில் ரூ. 136.0 மில்லியனாக இருந்த வாகன விற்பனை மூலம் அறவிடப்பட்ட வருமானம், 2025 ஆம் ஆண்டில் ரூ. 2954.5 மில்லியனாக அதிகரித்துள்ளது. இருப்பினும், இதர சொத்துக்கள் விற்பனை மூலம் அறவிடப்பட்ட வருமானம், 2024 ஆம் ஆண்டில் ரூ. 974.1 மில்லியனாக இருந்த நிலையில், 2025 ஆம் ஆண்டில் ரூ. 632.2 மில்லியனாகக் குறைந்துள்ளது. அதன்படி, மூலதனச் சொத்துக்கள் விற்பனை மூலம் அறவிடப்பட்ட மொத்த வருமானம், 2024 ஆம் ஆண்டில் ரூ. 1110.1 மில்லியனாக இருந்த நிலையில், 2025 ஆம் ஆண்டில் ரூ. 3586.7 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2024 இன் அறிவுறுத்தலின்படி சொகுசு வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக, 2025 ஆம் ஆண்டிலும், 30 ஏப்ரல் 2026 ஏப்ரல் 30 அன்றுள்ளவாறு வாகன விற்பனை மூலம் அறவிடப்பட்ட வருவாய் ரூ. 3,312.7 மில்லியனாக இருந்தது.

## 2.4 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

I. அரசின் நிதிசாரா சொத்துக்கள் முகாமைத்துவத்துக்காக, மையப்படுத்தப்பட்ட இணையவழி முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுவதில் ஏற்பட்ட தடைகளையும் சவால்களையும் கடந்து, இணையவழி நிதியல்லாத ஆதன முகாமைத்துவ முறைமை (NFAMS) 2023 செப்டம்பர் 01 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த NFAMS முறைமையின் வடிவமைப்பு, அபிவிருத்தி, செயற்படுத்துகை, முன்னேற்றம் மற்றும் பராமரிப்பு ஆகியவை அரசாங்கத்திற்கு எந்தவொரு மேலதிகச் செலவையும் ஏற்படுத்தாமல், கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் மனிதவளப் பங்களிப்பின் மூலம் செய்யப்படுகின்றன. வாகனங்கள் தொடர்பான தொகுதி 01 2023 செப்டம்பர் 01 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கட்டிடங்கள் தொடர்பான தொகுதி 2026 ஜூன் 15 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய தொகுதிகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும். இருப்பினும், NFAMS இனை வெற்றிகரமாகச் செயற்படுத்த, இந்த அமைப்பில் நிகழ்நேரத் தரவுகளை முறையாகப் பதிவு செய்வதற்காக அனைத்து பொது நிறுவனங்களின் இணக்கத்தை மேம்படுத்துவது மேலும் ஒரு சவாலாக உள்ளது.

II. பொது நிறுவனங்களின் (அரசு முகவராண்மைகள், பொதுத் தொழில்முயற்சிகள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள்) நிதிசாரா ஆதன முகாமைத்துவத்தை எளிதாக்குவதற்கும், புதுப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொது முதலீட்டை எளிதாக்குதல், இந்தச் சொத்துக்களின் முகாமைத்துவத்துக்கான வழிகாட்டுதல்களை வழங்குதல், வருவாய் ஈட்டுதல், செலவின முகாமைத்துவம் மற்றும் பயன்படுத்தப்படாமலுள்ள மற்றும் முழுமையாகப் பயன்படுத்தப்படாத சொத்துக்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தும் பொருட்டு அரசாங்கக் கொள்கை உருவாக்கத்திற்கு உதவுவதற்கும் NFAMS இனை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக, அனைத்துப் பொது நிறுவனங்களின் ஒத்துழைப்பும் தேவைப்படுவதுடன், இது ஒரு சவாலான செயலாகவும் காணப்படுகின்றது.

III. கொம்ப்றோலர் நாயகம் அலுவலகம் நிறுவப்பட்டதிலிருந்து, தேவையான வெற்றிடங்களை நிரப்புவதில் போதுமான பணியாளர்கள் இல்லமையினால் ஏற்படும் தடைகள் இந்த நிறுவனத்தின் செயல்பாட்டில் ஒரு சவாலாக இருந்து வருகிறது.

K. A. Ramya Kanthi
Comptroller General
Comptroller General's Office
General Treasury
Colombo 01.

கொம்ப்றோலர் நாயகம்

# அத்தியாயம் 03 - 2025 டிசம்பர் 31 முடிடைந்த வருடத்திற்கான முழுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ருபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | 3,587,266,556 | 1,110,150,162 | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 3,587,266,556 | 1,110,150,162 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **3,587,266,556** | **1,110,150,162** | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 57,189,000 | 45,789,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 40,211 | 133,392 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 4,768,092 | 4,178,005 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **61,997,303** | **50,100,397** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **3,649,263,859** | **1,160,250,559** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **260,005** | **579,105** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **3,649,003,854** | **1,159,671,454** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 38,300,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 35,024,150 | 29,279,516 | |
| 22,263,858 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 18,342,227 | 14,832,517 | ஏசீஏ-2(ii) |
| 322,281 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 322,238 | 215,139 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **60,886,139** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **53,688,615** | **44,327,172** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| # # | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 924,674 | 814,982 | |
| 1,579,991 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 1,566,509 | 1,909,767 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 500,000 | திறன் விருத்தி | 14 | 490,665 | 497,000 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | |
| **3,613,861** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **2,981,848** | **3,221,749** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 40,211 | 133,392 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 6,869,087 | 3,949,656 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **6,909,298** | **4,083,048** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 63,579,761 | 51,631,969 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **3,585,424,093** | **1,108,039,485** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | 3,585,424,093 | 1,108,039,485 | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசீஏ-3 |
| | | | **3,585,424,093** | **1,108,039,485** | |

1

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 16,646,801 | 15,162,292 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 6,994,542 | 4,893,547 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **23,641,343** | **20,055,839** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 6,994,542 | 4,893,547 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 16,646,801 | 15,162,292 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **23,641,343** | **20,055,839** |

பக்க இலக்கம் 8 முதல் 29 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 30 முதல் 67 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

